

பிரபு பிலிம்ஸ் அளிக்கும்
உலகம் சிரிக்கிறது
PSR

# உலகம் சிரிக்கிறது

(கதைச் சுருக்கம்)

சந்தர் - என் மாமன் மகள் செல்லம். அவளுக்கு என் மீது அளவுகடந்த அன்பு. ஆனால் அவர்கள் செல்வந்தர்கள். நான் அனாதை-அத்தோடு ஏழை. எனக்கு எப்படிகிட்டுவாள் செல்லம். இதற்கு செல்லம் ஒரு வழி சொன்னாள் தன் நகைகளை விற்று ரேஸுக்குச்சென்று குறுக்குவழியில் பணக்காரனாகத் தூண்டினாள். இதில் எனக்குத் துணைவந்தான் குமார்...

குமார் :- நான் குறிவைத்தேன் செல்லத்தின்மீது-அவளின் தந்தையும் செல்லத்தை எனக்குக் கட்டித்தர ஒப்பினார். இச்சமயத்தில் காதலன்-முறையுள்ளவன் என்று ஒருவன் என் இன்பவாழ்க்கைக்கு குறுக்கே வந்தான்.

அவனை கவிழ்க்கத் திட்டமிட்டேன். ஓடாத குதிரைகள் மூன்றின் பெயரைக் கொடுத்தேன். அன்று அவை எனக்கு எதிராக சதிசெய்து வெற்றிகண்டன. சந்தர் பணக்காரனாகி விட்டான். செல்லத்தையும் மணந்துகொண்டான். நான் நிம்மதி இழந்தேன். அதன் விளைவு சந்தர்-செல்லம் வாழ்க்கையின் முட்டுக்கட்டையானேன்!

செல்லம் :- கொடியவன் குமாரின் பேச்சைக்கேட்டு என் கணவர் ரேஸ் பிரியராக மாறி சொத்து, சுகம், அனைத்தையும் இழந்தார்-உலகம் சிரிக்கும் நிலைக்கு ஆளாகியது என் குடும்பம். அப்போதும் உதவிசெய்ய வந்தான் ஜகதீஷ்......

ஜகதீஷ் :- ஹ...குமார் சந்தரைப் பழிவாங்கினால் குமாரைப் பழிவாங்க நானிருக்கிறேன். தாசி சின்னக்கண்ணு, ஆண்டி சிங்காரம் இவர்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு சதிராடினேன். சதிபுரிந்தேன்-குமாரின் விதியை மாற்ற. ஏன்? குமார் சந்தரை மட்டுமல்ல கெடுத்தது! அப்பாவி முனியாண்டிப்பிள்ளையின் வாழ்க்கையையும் உலகம் சிரிக்க வைத்துவிட்டானே!

முனியாண்டி :-சுந்தரி ஓடிவிட்டாள் அத்தோடு என் சிந்தையும் ஓடிவிட்டது. இப்போது உலகத்தைப் பார்த்து நான் சிரிக்கிறேன். என்னைப்பார்த்து உலகம் சிரிக்கிறது!

ஏளனமாகச் சிரிக்கத்தொடங்கிய உலகம் எப்படி
களிப்பால் சிரிக்கிறது-விளக்கத்தை வெள்ளித்
திரைமுகப்பில் காணுங்கள்!

## நிர்மாணஸ்தர்கள்

| | | |
|---|---|---|
| இசையமைப்பு | — | S. தட்சிணாமூர்த்தி |
| இசைக்குழு | — | S. D. பார்ட்டி |
| ஒளிப்பதிவு | — | V. ராமமூர்த்தி |
| ஒலிப்பதிவு | — | A. கிருஷ்ணன் B.A. (பாடல்) |
| | | T. A. ஜகன்னாதன் B.A. L.C.S.E. (வசனம்) |
| ஆர்ட் | — | செல்வராஜ் |
| மேக்கப் | — | M. கெஜபதி T. T. சுந்தரம் |
| | | C. V. சங்கர் ராகவன் |
| செட்டிங்ஸ் | — | C. குப்புசாமி நாயுடு |
| | | K. சீனிவாசன் |
| | | நீலகண்டன் |
| மோல்டிங்ஸ் | — | கோபால்பிள்ளை |
| பெயின்டிங்ஸ் | — | K. S. N. மூர்த்தி |
| | | ஜெயராம ரெட்டி |
| உடை | — | C. K. கண்ணன் |
| நடனம் | — | R. கிருஷ்ணராஜ் |
| ஸ்டில்ஸ் | — | R. வெங்கடாச்சாரி |
| பப்ளிஸிட்டி டிசைன்ஸ் | — | ஆர்ட் & பப்ளிஸிட்டி சர்வீஸஸ் |
| புரோஸஸிங் | — | V. D. S. சுந்தரம் |
| லாபரட்டரி | — | விஜயா லாபரட்டரி |
| புரொடக்ஷன் நிர்வாகம் | — | C. கிருஷ்ணன் |

### உதவியாளர்கள் :

| | | |
|---|---|---|
| டைரக்ஷன் | ... | S. P. கணேசன் |
| | ... | ஸ்ரீராமுலு |
| எடிட்டிங் | ... | R. ஸ்ரீராமுலு |
| ஒளிப்பதிவு | ... | N. ராமமூர்த்தி |
| | | ராதாகிருஷ்ணா |
| ஒலிப்பதிவு | ... | R. ஜெயசந்திரன் |
| | | V. ஜனார்த்தனம் |
| மேக்கப் | ... | K. சின்னசாமி |
| உடை | ... | K. வீராசாமி |
| புரொடக்ஷன் | ... | V. S. செந்தில்வேல் |

காட்சிப் பொருள்கள் : சினிகிராப்ட்ஸ்

Recorded on WESTREX

ஸ்டுடியோ : விஜயா & வாஹினி

பிரபு பிலிம்ஸ்

அளிக்கும்

# உலகம் சிரிக்கிறது

பாடல்கள்.

## 1

இயற்றியது :
அ. மருதகாசி

பாடியவர்கள் :
சீர்காழி கோவிந்தராசன்
P. சுசீலா

இருவரும் : சந்தோஷந்தான் இனி வாழ்விலே—நமது
வாழ்விலே—இந்த
உலகிலே

சங்கர் : சொந்தம் ஆனோம் நீயும் நானும்
சுதியும் ராகமும்
உறவாடல் போலே

செல்லம் : இந்த நாளை எண்ணும் போது
இதயம் துள்ளுது
ஆனந்தத் தாலே

சங்கர் : இன்பம் என்னும் தேனை உண்ணும்
வண்டு நான்! மலர் நீ!
அன்பே வா! அழகே வா! அமுதே வா!
(சந்தோ)

கனியும் நீயே! கிளியும் நானே!
எனது ஆசைக்கு
விருந்தாய் வந்தாயே!

செல்லம் : வசந்தம் நீயே! குயிலும் நானே!
வளம் காதலின்
இசை பாடுவேனே!

சங்கர் : எண்ணம் போலே இனிமை காண்போம்!
மேகம் நான் தோகை நீ

இயற்றியது :
பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்

பாடியவர் :
P. சுசீலா

அமுதமே என் அருமைக் கனியே
ஆசை பொங்கும் கண்ணே

அன்பு தவழும் பொன்னே
தூங்கடா செல்வமே தூங்கடா (அமுதமே)

கொடியிலாடும் மலரும் நாணும்
கலையின் வெள்ளமே...ஓ...

மடியிலாடி மழலைபேசி மகிழும்
மதுரத் தேனே

மனதைக் கவரும் பொன்னே
தூங்கடா செல்வமே தூங்கடா (அமுதமே)

அழகு வானின் நிலவை ஓடித்
தழுவ வேண்டுமோ...ஓ...

உலகம் தூங்கும் இரவிலே நீ
உறங்கிடாததும் ஏனோ

உயரும் நினைவு தானோ
தூங்கடா செல்வமே தூங்கடா (அமுதமே)

3

இயற்றியது :
சுப்பு ஆறுமுகம்

பாடியவர் :
P. சுசீலா

உல்லாச வாழ்விலே சல்லாப நேரமிதே
இணையான ஜோடி நாமே
ஈடில்லா சொர்க்கம் காண்போம்
சிங்காரம் பேசும் காதல் சிலைபாடுதே (சிங்காரம்)

அலை பாயுதே ஆசை வலை வீசுதிங்கே
நிலை மீறுதே நெஞ்சில் நினைவாகுதே

அமுதான கீதம் நானே
அதில் காணும் நாதம் நீரே
ஆனந்தமே நமக்கென்றும் சொந்தமே (சிங்காரம்)

சுவை யாகுதே வேளை
சுகம் நாடுதிங்கே
கலையாகவே சிந்தை விளையாடுதே
என்னாளும் ஆடிப்பாடி
இருப்போமே இனிமை தேடி
பேரின்பமே நமக்கென்றும் சொந்தமே
உல்லாச வாழ்விலே சல்லாப நேரமிதே
இணையான ஜோடி நாமே
ஈடில்லா சொர்க்கம் காண்போம் (சிங்காரம்)

## 4

இயற்றியது :
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர் :
கண்டசாலா

சூதாடி மாந்தர்களின் சுகவாழ்வும் ஒருநாளில்
பாதாளம் போகுமெனல்
பாரறிந்த உண்மையன்றோ

சொல்லமுடியாத துன்பக்கதை
சூதாடி மனிதரின் சோகக்கதை (சொல்ல)

நல்ல மனிதரும் வஞ்சகராகி
கள்ளவேலைகள் செய்தகதை—சிலர்
கொள்ளை லாபத்தில் கொண்ட மோகத்தால்
உள்ளதும் இழந்து உறுக்குலைந்த கதை (சொல்ல)

அந்த நாளிலே பஞ்சபாண்டவர்
அரசு உரிமையை இழந்ததும்
அழகு பாஞ்சாலி அம்மையாருடன்
அனைவரும் காட்டில் அலைந்ததும் (சொல்ல)

அன்பு மேவிடும் நளன் தமயந்தி
அல்லல் சுமந்து வருந்தியதும்
அரிய காதலை பிரிய நேர்ந்ததும்
ஆதாரம் இழந்ததும் சூதாட்டத்தாலே (சொல்ல)

இயற்றியது :
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர்கள் :
S. C. கிருஷ்ணன்
ராகவன்.

முனியாண்டி : என்—வீட்டு நாய் போனதற்கே—நான்
வீரனாய்க் குந்தியிருக்கேன்—ஒரு
வெறும் நாயைத் தேடிக்கிட்டு தம்பி நீ
வீணாய்க் கிளம்பினாயே

பய—டிப்புக் குடுத்து டிப்புக்குடுத்து
டிமிக்கி குடுத்துட்டாண்டா—அவன்
திறந்த வீட்டில் நாயைப்போல
துணிஞ்சி புகுந்துட்டாண்டா

சிங்காரம் : அவன்—டிப்புக் குடுத்து டிப்புக் குடுத்து
டிமிக்கி குடுத்துட்டாண்டா—நீ
திறந்த வீட்டில் நாய் நுழைய
எடங் குடுத்ததும் ஏண்டா (டிப்பு)

முனியாண்டி : நம்பியிருந்தபொருள்
நாணயம் மிகுந்த பொருள்
வெம்பி விழுந்ததடா எந்தன் தோழா—இதை
வெளியிலேதான் சொல்லாதேடா
எந்தன் தோழா (டிப்பு)

சிங்காரம் : வெம்பி விழவுமில்லே
நம்பிக்கையில் மோசமில்லே
சந்தேகம் வலுத்துக்கிட்டா
கிறுக்குத் தோழா—எல்லாம்
தலைகீழாய் தெரியுமடா குருட்டுத்
தோழா (டிப்பு)

முனியாண்டி : அட—குதிரை மேலே சத்தியமா
கொடுமைக்கு நான் சொல்லவில்லை
எதிரிக்காரப்பய ஒருத்தன்
எந்தன் தோழா—என்

இதயத்திலே அடிச்சிட்டாண்டா
எந்தன் தோழா (டிப்பு)

சிங்காரம் : அட—கொம்பொடிஞ்ச மாடு
குதிச்சி என்ன புண்ணியம்

முனியாண்டி : ஏய்—தும்பறுந்த மாட்டைத்
தொறத்தி என்ன புண்ணியம்

சிங்காரம் : காலொடிஞ்ச குதிரை
கனச்சி என்ன லாபம்

முனியாண்டி : கையொடிஞ்ச நொண்டி
மொறச்சி என்ன லாபம் ?
என்ன லாபம்

சிங்காரம் : என்ன லாபம்

முனியாண்டி : என்னடா லாபம் ?
இப்படிக்கு அன்புள்ள நஷ்டம்

சிங்காரம் : வந்தான் வந்தானே
வராதவன் வந்தானே

முனியாண்டி : போனு போனுளே
போகாதவ போனுளே

சிங்காரம் : போனது போகட்டும் தேடாதே

முனியாண்டி : ஆனது ஆகட்டும் வாடாதே

சிங்காரம் : தேடாதே

முனியாண்டி : வாடாதே

6

இயற்றியது : பாடியவர் :
இ. ரா. பழனிச்சாமி சிதம்பரம் ஜெயராமன்

உலகம் சிரிக்குதடா—மனிதா
உலகம் சிரிக்குதடா
அன்பிலே பிறந்து வளர்ந்து
வம்பில் அழியும் நிலையைக் கண்டு (உலகம்)

பண்பும் அறிவும் தடுத்த போதும்
நண்பனைக் கெடுத்திடும் வஞ்சகன்
கண்களிரண்டிலும் கடலைப் பெருக்கி
கலங்கிடும் போது உதடுகளோரம் (உலகம்)

உள்ளத்தில் வைத்து உருவாக்கி—தினம்
பள்ளியில் வைத்து ஆளாக்கும்
பெற்றவர் வருந்திட சிரித்தவன்—முடிவில்
புலம்பிடும் போது பொன்னிதழ் திறந்து (உலகம்)

பேசும் மலராம் பெண்களை—மண்ணில்
புதைத்திட நினைத்தவன் சிரிக்கிறான்
வீசும் நெருப்பாம் கற்பிலே—அவனும்
வேக உலகம் சிரிக்குது—பெண்கள் (உலகம்)

சுபம்.



நடிகர்கள்:

M. R. ராதா
பிரேம்நசீர்
காகா ராதாகிருஷ்ணன்
R. முத்துராமன்
'முதலாளி' கன்னையா
C P. கிட்டான்
S. V. ஷண்முகம்
கண்ணன்பாபு
ஸ்டண்ட் கிருஷ்ணன்
அணுகுண்டுஅய்யாவு

நடிகைகள்:

சௌகார் ஜானகி
K. V. சாந்தி
V. மீனாட்சி
பேபி சாந்தி

கெஸ்ட் ஆர்டிஸ்ட்: V. K. ராமசாமி

மற்றும் பலர்.

பின்னணி பாடியவர்கள்:

C. S. ஜெயராமன், கண்டசாலா, சீர்காழி கோவிந்தராஜன்,
S. C. கிருஷ்ணன், ராகவன், சுசிலா.

பாடல்கள்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், A. மருதகாசி,
சுப்பு ஆறுமுகம், பழனிச்சாமி.

மூலக்கதை — லக்ஷ்மி கிருஷ்ணன்
திரைக்கதை — P. R. சீனுவாசன்

வசனம்:

துறையூர் K. மூர்த்தி

டைரெக்ஷன்:

R. ராமமூர்த்தி

தயாரிப்பு:

R. T. கோவிந்தன்